# (Chapter XXII Code of Criminal Procedure)
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, CUDDALORE DISTRICT, CUDDALORE
## C.C.No.203 of 2023

அரசுதரப்பு **10 -**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முகுந்தன் | வயது | :55 |
| தந்தை/ கணவர் பெயர் | : ரங்கசாமி | தொழில் | : மோட்டார் வாகனஆய்வாளர் நிலை-1 |
| கிராமம் | : தாம்பரம் | ஜாதி | :-------- |
| தாலுக்கா | :தாம்பரம் | சமயம் | : |
| மாவட்டம் | :செங்கல்பட்டு | மொபைல் | : 7358685246 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 20.01.2026 நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர்**,** கடலூர்**,** அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

(எதிரி முன்னிலை**.** வழக்கறிஞர் முன்னிலை

முதல் விசாரணை**:**

நான் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை -1 ஆக தற்சமயம் தாம்பரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். 29.03.2023 அன்று கடலுர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை -1 ஆக பணிபுரிந்தபோது திருப்பாபுலியூர் காவல்நிலைய குற்ற எண்.142/2023 பிரிவு 279, 304(A) இதச வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனம் TN -31-BD-2836 என்ற பள்ளி வாகனத்தை ஆய்வு செய்தேன். ஆய்வின்போது வாகனத்தில் எவ்வித சேதாரமும் இல்லை. வாகனத்தின் தடை மற்றும் டயர்கள் திருப்திகரமாக இருந்தது. விபத்தானது வாகனத்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறினால் ஏற்பட்டதல்ல என்று ஆய்வறிக்கை வழங்கினேன். நான் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ**.**சா**.**ஆ**.5.** ஆக குறியீடு செய்யப்பட்டது**.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது மோட்டார் வாகனஆய்வறிக்கையில் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் விவரம் போலிசார் தெரிவித்ததன் அடிப்படையில் குறிப்பிட்டேன். நான் விபத்து ஏற்பட்ட இடத்திற்கு நேரடியாக சென்று ஆய்வு செய்தேன். நேரடியாக ஆய்வு செய்தது பற்றி எனது ஆய்வறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் ஆய்வு செய்த விவரத்தை குறிப்பிட்டால் வழக்கிற்கு பாதகம் ஏற்படும் என்பதால் குறிப்பிடாமல் தவிர்த்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை- இல்லை.**